கெடினும், 80 [§ 100] = and in the perishing: = though yourself should perish.

கெட்ட = அற்ற, இல்லாத, senseless, 121. கெட்டு for கெட்ட, 288.

II. கேடு (as பேறு *etc.*), ruin, 80, 132, 134, 173, 316. [S. खेद्. GR. κῆδος.]

கெழ் KEṚ. [Comp. கிழ், கேழ், கேள். C. D. G. p. 479]

v. கெழு (கெழுவு, கெழுமு, கழுமு), become familiar, accustomed to.

கெழீஇனர், 385. கெழீஇ, 213.

In 90 உருகெழு, as an epithet of fire, is doubtful.

உரு = heat, and கெழு = splendour: or கெழு = உள்ள.

கேணி KĒṆI [S. खनि. Comp. கிணறு. C. *kaṇi.* M. *kēṇi.* T. *khani, gani*] a temporary well; hole in the sand, 184.

'எடுத்தாலும் ஊறும், இறைத்தாலும் ஊறும், இடைநடுவே
மடுத்தால் மறிபடுமோ, மணற்கேணித் தண்ணீர்? அதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கக் கல்வி உண் டானவர் அன்புடனே
கொடுத்தாற் குறைவருமோ? . . . . G. 8.

The water of the well dug in the sand, though you draw it forth, gushes still; though you irrigate with it, it gushes still; dam it up, is it stayed?

Thus, if the learned lovingly make happy those who approach them, will their resources diminish?'

கேழ் KĒṚ = நிறம், hue, 41, 212.

[From கெழு-மை. Comp. with √கழ் = abound. In M. = a reddish deer.]

Nig. கேழ் நிறம ஒளி ஒப்பாகும்.

K. கேள் KĒḶ. [Comp. கிழ, கெழு, உரி, கிளை. C. *keḷe, geṇe.*]

I. *Coll. noun*, kindred, 29, 191. உறவு, உறவினர், தமர், சுற்றத்தார.

= கேளிர், 9, 201, 382.

கேண்மை, intimacy; friendship: நட்பு, தொடர்பு, உறவு [see K. கெழுதகைமை].

125, 128, 138, 154, 166, 172, 204, 211, 236. [S. स्नेह.]

II. *v.* (§ 70) [M. KĒḶ. C., Tu. KĒN. Comp. Lat. CLU, AUS-CUL-T-. Gr. κλυ.
S. श्रु].

1. Ask, ask leave, enquire, 30, 86.

2. Hear, 64, 100, 126, 322, 364. [கேட்கலார்: கேள் + கு + அலார.]

K. கேள்|வி [G. 96] *traditional lore*, 63, 106, 137, 260. [M.]

கை KAI. [As செய் : கை :: कृ : कर. T. *cheyi, kēlu.* C. *kai, key.* M. TU. See C. D. G. pp. 468, 503.]

I. (1) கை, *n.* hand, 5, 98, 193, 315, 386.

கைக்கோல், walking-stick, 14. கைகாட்டு, indicate with the hand, 328.

கை(ந)நீட்டு, stretch out hand (*to take, supplicate,* or *give*), 238, 262, 288.

கையுறு, come into hand of, 5, 84, 300.

கைப்படு, fall into the hands of, 38, 129.

கைவிடு, abandon, 43, 76, 130, 208, 214, 294.

கைம்மாலை, the wreath in (her) hand, 393.

கைத்து = கைப்பொருள, சொத்து, means, property: *what is in hand* (G. 63), 19, 80, 92, 206, 217. [N. M. K. p. 3.]

(2) Minuteness. கைஞ்ஞானம, trifling, unreal wisdom, 311.

[This puzzles the commentators. Three explanations are given: (1) கை = அற்ப; (2) கை = கசந்த, அருவருத்த; (3) கை = கைளால்குத்தி, i. e. 'fisticuff wisdom']

(3) Propriety of conduct, நல்லொழுக்கம, 59, 163, 362, 382.

(4) Money (in hand), 371 [= வாரி in 370]. கைப்பொருள், property, 376

II. *v.* (§ 64) for கச, be bitter, 112. [M.]

கை|ப்பு = கசப்பு, 116.

கொ KO [கொட், கோட்], கொ|ம். The idea is anything round, bent, spherical.

[Considering the many verbs whose first syllable is கொ, it may be equivalent to SAM, *σύν*, *con*, *cum*, in Sanskrit, Greek, and Latin, and these verbs may be mostly compounds. Thus

கொ|டு (comp. வி-டு, ஆ-டு, இடு).

கொ|ள (விள், ஆள்).

கொ|ல் (வில், ஆல், இல்).

கொ|ழு (விழ், ஆழ், இழ).

கொ|தி, கொ|ய், கொ|த்து, கொ|ட்டு, கொ|ழி, *etc.*

Have we traces of compounds in verbs with initial கொ, வி, ஆ, நி?]

கொம்|பு, the bough of a tree, 203, 290. [Comp. கூம்பு, கூன். M., C., TU. T. *kommu*.]

கொம்|மை, rotundity, 85. [Comp. கொங்|கை.]

கொடு KOḌ. [Comp. S. √कुट्, कोट्. Hence we have கோடு also. Comp. கடு. M. KOḌ. T. *goḍa*, KAḌ|U, *gadu*. C. KAḌ.]

I. கொடு = curved, folded round.

Cruel, evil. கொடு, 124. கொடியவை, cruel things, 388.

கொடிது, 'tis hard! 88.

II. *v*. [§ 64. Comp. கொள், of which it is a *causal*. M., C., Tu. *korru*] give. ஈ, தா, 5, 10, 93, 274, 278, 296, 373.

கொடாது, 169. கொடை, *n*. a giving, gift, 65, 91, 184, = ஈகை.

III: கொட்டு, *v*. (§ 62) = எறி, strike, beat a drum, 24, 257. = கடாவு, drive in. பதனுசெய், tap, gently manipulate, 208. [T. M. In C. from *koḍu*. Comp. கொல் = smite; கோல்]

IV. கொடி [M. Perhaps from கொள் + தி = *what grasps*] a creeping plant.

கொடிப்புல், a creeping grass, 141.

கொய் KOY [C. KOY, KUY. M. T. KŌY-U. Comp. *καρπός*. Lat. *carp*. There seems to have been a √कर्प्] *v*. (§ 58) pluck, 374.

K. **கொல்** KOL. [Comp. கோல், கல், கொட்டு. The idea is 'stroke, blow.' M.; C.; T. KOL-A, 'kill, quell.' In Lithuanian *kalwis*; Lettish *kalleys*. Lat. *cell*-.]

I. கொல், smith's or any artisan's work.

கொல்லன், a smith, 298.

[Jī. Chin. i. 208: கொனனெறி = கொறரெழில்.]

II. *v*. கொல், கொல்(லு), (§ 70) 213, kill; 363.

[Jī. Chin. i. 251: 'உப்புடைய முனனீா உடனறுகரைகொல்வ தொப்புடையதானை,

A host comparable to the salt sea that in its wrath *devastates* the shore.']

Forget—destroy the benefit of, 111. கொனறனன = கொனற அனன, such as if one had slain, 186; torture, 279.

[See நன்றி and செய்ந்நன்றி. The Sanskrit expression कृतघ्न = 'an ungrateful man'—'*destroying*,' from हन् = கொல்.

Comp. B. I. S. :

'कुतः कृतघ्नस्य यशः कुतः स्थानं कुतः सुखम्।
अश्रद्धेयः कृतघ्नो हि कृतघ्ने नास्ति निष्कृतिः॥

How can "the destroyer of the thing done" obtain glory, station, or comfort? Untrustworthy is he, for him is no expiation.']

கொலை, murder, 81, 331.

கொலைஞர், murderers, 331.

K. கோறல் = கொல்லுதல், killing. [So சேறல், கோடல்.]

[N.M.K. 92: '. . . . கரப்பினுங்
கொலைஞனை மேனிற்குங் கொலை,

Murder, though you conceal it, stands over the murderer: *murder will out*.']

III. An explétive, emphasizing a statement, or a question := 'I pray, I wonder, now,' 36, 41, 48, 49, 58. = ஓ, 267. கொல்லோ, 298, 385, 394.

கொல்|லை. [The idea is 'retired nook.' Comp. M. *kolli* and C. *kolli, golli.*]

= புனம, தினைப்புனம், backyard, croft, 178, 283.
'பலவயல்கள் சேர்ந்ததொருநிலம' = a farm.

கொழி KOṚI, *v.* (§ 64) sift, examine, 319. [Comp. கழ்.]

கொழு KOṚ, plumpness, luxuriance. *v.* (§ 64) wax fat; prosper, 96.

கொழு|வு = மூளை, fat, 46. [Comp. குழ. C. *kobbu, korbu.* M.]

கொள் KOḶ, *receive.* [கோள், கோ, கொண்ட். T. KON, KŌ, KU. Comp. கொடு. M.; C.]

I. கொள், *v.* [§ 56 (III)].

(I) Take hold of, receive, get, buy, 21, 24, 106, 118, 120, 153, 236, 253, 260, 305, 387.

(II.) Take possession of, use, maintain, practise, 3, 18, 25, 35, 136, 143, 364, 377. கொண்டு = with, by means of.

(III) Seize, hold fast, carry off, 148, 156, 330.

(IV.) Hold, contain, 191, 394. [Comp. குளம்.]

(V.) Marry, 3, 364. கொண்டான், a husband = கொண்டவன, 363.

(VI.) Hold in estimation, 25, 48, 72, 133, 165 [see கோள], 379.

[For கொள in the sense of 'accept, receive,' see T. 82:

'பாயந்தெழுந்து கொள்ளாருட் கொள்ளாத கூறுமை,

The not rising and rushing forward impetuously to say unacceptable things among those who do not esteem us.']

(VII.) In comp. with a noun. கணங்கொண்டு, in troops, 25, 393. (கொள், G. 153.)
(VIII.) With ellipsis. = தேடிக்கொண்டு, seeking, 15, 20, 34, 53, 382 (செய்து), 57. = undertake, 28, 143.
(IX.) A mere auxiliary [H. B. § 106] 70, 262.
(X.) கொண்ட = உள்ள, 14, 68.

II. கொண்மூ, *n.* cloud, = மேகம், முகில், 8.

III. கொண்டமை, a ground, position taken up, 212.

கொள்|கை, tenet, principle, 141.

IV. கொள்ளு, horse-gram: காணம், *dolichos uniflorus:* of two kinds, black and red, 387. [M. H. *kulthi.*]

கொன் = vain, useless: வீண்.
I. *adv.* கொனனே + வீணும், in vain, uselessly, gratuitously, 9, 55, 92, 162, 286, 330.
II. *n.* hell, 243.
கொனனுளர், those who inhabit hell; those who are lost: *perditi.*
['கொனனே இருத்தல்குறை (= சும்மா இருப்பது குற்றம்), to remain idle is a fault.' *Ēl.* 38.]

கோ KŌ [கோன். M. See கோல், கொளு. T. *kolu*='serve.' Comp. *khān.* 'King' is from *cyn*='tribe;' but consider s. गो].

I. *n.* = அரசன்: king, 81.
II. *v.* (§ 64) string together, 335, [for கோர்.] [C. M. T. KŪR|CHU = கூட்டு.]
Hence கோவை.
III. கோ|ப்பு (a wallet slung over the shoulder) = உணவு, உணு, ஆற்றுணு, கட்டுச்சோறு.
பொதிசோறு, provisions, food for a journey, 20, 328.
[√கோ, § 64, string (beads *etc.*)]
Used with சோறு. Hence 'wallet' is probably the real meaning.

கோங்கு, silk-cotton tree, *Bombax gossypinum*, 223, 400.

கோட் KŌḌ. [Comp. s. कुट्, कोट्ट, कोण, कूण्, and கோணம்.]

I. கோடு, see கொடு.
n. 1. Flexure, plait, fold, 131.
2. Turning: கோடு இல் தீ கூற்றம், death inflexible and cruel, 5.
3. Rounded edge, border, 354, 372. கடற்கோடு, the sea-shore, 263.
4. A branch, flexible twig, small shrub, = கொம்பு, 192, 215.
5. A curved tusk, 358, 376, 378.
II. *v.* (§ 62) bend, diverge from right: கோணு, 124.
Also, in the same sense, கோட்டு: கோட்டிய = கோடிய = வளைந்த, bent, 395.
['கோல்கோடியவன், a tyrant.' கலித். i. 10.]
'நடைதனக்குக் கோடாமொழி வனப்பு,
Strict truthfulness is the beauty of conduct.' Ç. P.]

கோடல், see கோள்.

கோடி (=anything eminent) [S. कोटि] ten millions, 168.

கோட்டி [S. गोष्ठि] an assembly, society, 155, 255, 260, 311, 312.
The root idea is 'cattle-stall.' Syn. சபை, or அவை, கூட்டம். See ch. xxxii.

கோத் KŌTH.

கோ|து, *v.* [கோது, adjust, trick out. M. *kōthu*, 'dress hair'].

கோ|தை = பூமாலை [comp. கொந்து and கோ].

I. A flower-wreath. By metonomy, 'a damsel wearing such a wreath.'
கோதாய், 209. கோதையார், 46, 48.
[*Ēl.* 2, பூங்கோதாய். G. 93, thou of the flowery garland.]
கோதையருவி, waterfalls like flower wreaths on the mountain's brow, 71.

II. Refuse, dregs. சக்கை, fault, 106. சாரமிலவாபபொருள், stalks from which the juice has been expressed. கருப்பஞ் செதகை, 34.
[Jī. Chin. i. 204: 'கோதியல்காமம், faulty lust' S. कोप (कुप्).]

III. *v.* (§*62) ferment, 47. Perhaps = கொதித்து.

கோத்திரம் [S. गोत्र] family, race, 242.
Here = 'the lowness of the arrogant upstart's origin.'

கோல = தண்டு. [From T. KOLU, 'measure; serve.' Comp. கொல் and கோ. M., T., C.]

1. A staff, 11, 13, 14 (with ஊன்று).
கைக்கோல், (her) staff. அம்மனைக்கோல், (her) mother's staff.
கோறகண்ணள, she who uses a staff for eyes, blind with age, 17.
[Comp. B. I. S. 80, which seems an imitation of 13]

2. Any stick, 41, 253, 258. தண்டம.

3. Arrow, 152.
சுட்டுக்கோல, a smith's poker, 208.

கோலம் = அழகு [M., C., T. *kōla*; comp. S. गोल] adornment [lines of paint *etc.*] 43, 397.

கோழி, domestic fowl, 341 [from கொழ், கொழு, or கொழி = the pampered one. C., M. *kōri.* Tu. *kōri.* T. *kō-ḍi.* S. कुक्कुट. C. D. G. p. 504. Comp. √கு, கூ, or கோ: குயில, கூவு, கோகம், கோகிலம்].

கோள் KŌḶ, see கொள்ளு. It is another form of கொள்ள or கொள்ளல். Vulgarly கோ. So in T. *ko* for *kona.*

I. கோள், infinitive.

கோட்படா = கொள்ளப்படாது, it cannot be carried off, 134.

II. Acquisition.

கொள்ளுதல = கொளளல = கோடல் = கோள், the incurring of, 77, 101, 220, 324. [See G. 37.]

III. கோள், *n.* = holding.

1. Contents: 'a tank that holds little,' 191. [In C. குளம் is *koḷa*, 'the holder,' from KOḶ. There is a play on the word.]

2. Estimation: மதிப்பு, 165: கோட்பாடு.

3. Quality (good): குணம், தன்மை, 18.
4. Opportunity to seize, 331.
5. Enclosure, precincts: சுற்றுக்கோள், 96.
[T. 12: 'கோளாளன் என்பான் மறவாதான்,
He may be styled a man of *comprehension* who forgets not!']
கௌவு, *v.* (§ 62) seize, clutch, 70. Often கவ்வு. [Comp. கவர். S. ग्रह्.]

ச ÇA.

K. சகடம், cart: வண்டில், 2. [S. शकट. சகடை, சாடு. சாகாடு is another variant.]
சகடக்கால், a cart-wheel.
[B. I. S. 5710:
'रथः शरीरं पुरुषस्य दृष्टम्।
Man's body appears as a chariot']

சக்கரம் = a wheel. [S. चक्रम्.]
சக்கர as adj. = kingly, 346.
சத்தம், either S. शब्दम्, word, grammar; or सप्तन्, seven.
The science of grammar (or the seven sciences), 52.
சந்தனம், sandal-tree: *santalam album*, 180, 234. [S. चन्दन.]

சமழ் ÇAMAṞ (§ 64) = நாணு, suffer shame or distress. [? S. क्षम.]
Nig. சமழ்த்தல்வருத்த நாணம்.
சமழ்|த்தனர், have felt humiliated [G. 83] 316.
சமழ்|மை = தாழ்வு, something to be ashamed of, 72.

சலம் [S. छल] trickery, 188.
சலவர், tricksters, 188. [T. 51.]
[T. 50: 'சலமொழிமாந்தர், men of deceitful words.']

சா ÇĀ. [Comp. சாய். S. ज्या, सो, सित; क्षि. T. CHA, CHĀ. C. SĀ, *sattu*. M. CHĀ, *chattu*. TU. SAI. See சாயம், சவம்.]
சா, *v.* die (§ 58. சா-கிறேன், செத்-தேன், சா-வேன், சா-க, சாவ, சா) 24 [157 from சாய்] 219, 281, 295.
சாயினும் = செத்தாலும் [T. 27]. சாநாள் (சாம), 92.
சாக்காடு = மரணம், சாவு, death, 52. [காடு an affix.]

சா|காடு = வண்டி, இரதம், 48. See சகடம்.
சாந்து, சாந்தம் [Tadbh. of சந்தனம். Comp. also शान्त] fragrant unguents, 48, 126, 389, 397.

சாய் ÇĀY, *lean, fall, die.*

I. சாய், *v.* [§ 57. Comp. சா and சாt. C. CHĀ|CHU. M. T. CHĀGU, SĀGU] 157, 184, 295.

II. *n.* கோரை, grass, 389.

III. சாய|ல் [comp. S. छाया. M.] reflected image, form, beauty, dignity, excellence, 142, 340.

சார் ÇĀR. [Comp. சேர், சாய்.]

சார் (சாரு, § 57) join, be close to, rely on, be dependant on, 124, 171, 175, 177, 178, 245, 309, 327.

In 126 சார்ந்தாய், 'thou hast relied upon.' This is then taken as a noun, and declined: சார்ந்தாய்க்கு, 'to thee who hast relied upon.'

And in voc. சார்ந்தோய்! O thou *etc.!*

சார்ந்தார், those thou hast relied upon.

[N.B. 1. Almost any form of the finite verb may thus be used as a noun.

2. The context alone decides whether the form is to be taken in an active or a passive sense.]

சார்வு, that on which one relies, 182.=சார்பு, ஆதாவு.

சாரல், the side and slopes of a mountain range, 127, 234. [M.]

சால் ÇĀL, *abundance.* [M., T. CHĀL. Comp. S. जल्.]

1. சால், *v.* abound [§ 56 (III)].

தோற்றஞ் சான்ற ஞாயிறு, 7. The sun so gorgeous in his appearing, 140.

சால, 49 and 318. சாலவும், (*adv.*) much, 243.

[சால்பு, excellence. *Ēl.* 6: 'சாலும் பிறர்நூலின் சால்பு, he will fully possess the virtues of every system.']

K. II. சான்றவர், சான்றோர், the excellent: மேன்மக்கள், ch. xvi, 41, 58, 68, 126, 133, 151, 153, 356, 357, 368.

In 100 சான்றோர் may be (1) subject to சொரிந்தார்; or (2) subject to என: சான்றோரால்; or (3) for சான்றோர்க்கு

சான்றாண்மை [see ஆள்], excellence, 126, 142, 179. [Comp. S. सान्द्र. M. *sāndra.*]

சாற்று ÇĀṞṞU.

சாற்று, *v.* (§ 62) [M. *chāttu.* Comp. சாட்டு, சாத்து] announce, 25, 49.

[The idea is (?) பறை சாற்று, strike the drum. An imitative word. Or √SĀL=சொல் (so சொற்று).]

சாறு=juice, 34. [S. सारम्.]

சி ÇI=*small.* [M. CHI|NNA, CHI|RRU, CHE|RRU, CHI|LA, CHI|L. T. CH|INNA, CHI|RI, CHI|RU, KINDA, KON. C. KI|RRU, CHI|KKA, KE|LA; CHI|RRU; KIṞ. TU. KI|NI. Comp. குறு; also கிழ், கீழ். S. किम्, छिन्न, कण.]

I. சில், சிற், சின் [opp. பல், பற், பன்].

சில, some, but a few, 135, 154, 204.
சிலர், some, a few, few, only a few, 113, 185.

II. சிறு (§ 131. *f*), சிற்று, சிறிய, சின்ன [opp. பெரு], *adj.* 24, 170, 237, 303, 395. = புல்.

சிறுநோக்கு, a glance of contempt: அலட்சியமாய்ப்பார்த்தல, 298.
சிறியவர், mean, low people, 149, 166, 353. சிறியார், 85, 125, 177, 186.
சிறுமை, 177, 183, 187. [T. 14.] இசைநதசிறுமை = natural meanness.
சிறிது, a little thing, 38, 99; a little while, 359.
சிறுகாலே, early, betimes, 35, 110, 328, 363. சிற்றறிவினோர் = புல்லறிவினோர், 329.
சிற|றினத்தார், 81, 204, 272. சின்மொழி, gentle speech, 362.

III. சிறு|கு, *v.* (§ 62) grow less, 110.

IV. சிறை, (1) captivity, 222. [Comp. செறி.] (2) room: அறை, 147.

['சிறியவன செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி, affording no shade to those who draw near—like the mean man's wealth.' கலித். i. 10. Comp. 202.]

சிகை = உண்டிச்சிகை, course at a meal, 1, 18. [S. सिक्थ.]

சித ÇITH.

சிதர், *v.* (§ 57) diffuse, spread.

சிதர் அரிக்கண், eye suffused with red, 394. [G. 153.]
[From *n.* சிதர். Comp. சிதறு, சிதை, சிந்து. M. CHIDAR = dust. S. छिद्.]

சிதல், சிதலே = செல், நசெல், white ant: கறையான், 147, 197. [√சிதை. M. *chidal.* C. *gedalu.* T. *cheda, chada.* S. सित, *white*; छित.]

சிதை, *v.* (§§ 57, 64) destroy, 179, 225.

சிதைந்து, degenerating, losing their moral sense, 156. Perverting, 71. (Or = சிதைய, so that others may be injured; injurious words, curses.) [S. छिद्. Comp. கெட்சிதறு. T. *chedu.*]

சிந்தி: நினை, *v.* (§ 64) think of, 329. [S. चित्, चिन्त्.]

சிரல், the kingfisher, சிச்சிலி, 395.

சிரி, *v.* (§ 64) grin, 49, 50. [M., C., T. KĒR.]

சில்லே from சில், an utterly worthless woman, 377. [C.]

சிவல் = கவுதாரி, a partridge := *the red one*, 122. [√சிவ, செ.]

சிற் ÇIRR. [Comp. சீர். S. श्री. M.]

I. சிற, *v.* (§ 66) abound, 104, 232, 285, 356.

II. சிறப்பு, *n.* politeness, courtesy, 159. Excellence; splendour; renown, 134, 139, 195, 252, 290.

தண்டாச் சிறப்பிற்றம் இன் உயிரை, their pleasant lives, possessed of (இன்) unfailing worth, 62.

சிறகு [comp. இறகு] wing, 41. [M. C., T. *rekka*. Comp. S. शिर.]

சிறியவர், சிறை, சின், see சி.

K. சின|ம்=கோபம், anger, ch. vii, 68, 178: குரோதம், கதம், வெகுளி. [M. CHIN|AM. C. KIN|ISU. T. KIN|KA.]

சீர் ÇĪR. [Comp. சிற. S. श्री. M.]

சீர், *n.* position, dignity, 176, 232, 242. Excellence, 226, 316, 352. Virtuous conduct, நல்லொழுக்கம், 68.

சீர்மை=சிறப்பு, position, dignity, 176.

சீரியார்=மேலோர், 232.

அச்சீர், so, with such attention, 345.

[*Mū.*: 'சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே;
அல்லாதார் கெட்டால் அங் கென்னாகும்?—சீரிய
பொன்னின் குடம்உடைந்தாற் பொன்னாகும்! என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால?

When men of real worth suffer reverses, the really worthy are really worthy still; when those not so are thus reduced what is there left? If a pot made of gold be broken, the gold remains! If a pot made of earth be broken, what is there left?']

சீலம், 'good conduct,' p. 34 *note* [S. शील], is not used in K. or in this work, though a technical term in the Jain system for நல்லொழுக்கம். See Jī. Chin. xiii. 220–224.

சுட் (சுட்) ÇUḌ. [M. CHUḌ. T. CHŪḌ. Comp. S. शुष्.]

I. சுடு, *v.* (§ 68) burn, 63, 89, 90, 124, 129, 224, 310.

சுடுகாடு=இடுகாடு: சுடலை: மயானம், burning ground, 121.

II. சுடர்=(1) சூரியன், (2) ஒளி, 189, 394, 398. [Comp. S. सुर.]

[Jī. Chin. i. 260: 'படுவெஞ்சுடரின் ஆண்டகை அவிந்தான,
Like the setting sun the hero sank into darkness']

III. சுட்டுக்கோல், a poker, 208. [See சூடு. T. SŪḌU.]

சும, *v* [§ 66. S. क्षम्. M. T. *mō-chu*] bear, carry, 24.

சுர, *v.* [§ 66. S. स्रु. Comp. சொரி, சோர். M.] gush forth, yield.

சுரும்பு, a beetle, bee, 122. [S. सुरभि?]

சுரம் = சுடுகாடு = burning ground, 5.

The meaning of சுரம் is '*a path through the* பாலைநிலம், *or arid jungle, desert land.*' [M. *churam*] In Nigandu: சுரமருநெறிகானமாாக்கம.

The following fine passage, கலித். i. 10, illustrates it:

' வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச் ;
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி ;
யாரகண்ணும் இகந்துசெய் திசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின் ;
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலை அஞ்சா வினைவராற கோலகோடி மவனிழல்
உலகு போல உலறிய உயர்மர வெஞ்சுரம் :

The parched *desert path* (சுரம்) abounding in lofty trees, which were

(1) full of withered offshoots,—like the poor man's youth ;

(2) that afforded no shade to those that drew near,—like the mean man's wealth ;

(3) that were perishing root and trunk, dried up by stroke of the sun's rays,—like the end of him who sins against his neighbour and dies to fame ;

(4) that were blasted,—like the world, when under the shadow of a tyrant-lord, who extorts money unjustly, with the aid of ministers that shrink not from murder, while oppressed subjects cry out.'

I take it to be for ஸ்வலம் [S. स्वल] = 'the blazing region.' It has many other meanings, answering to S. स्वर, स्मर, *etc.*

சுரை [S. सुरा].

1. Toddy. 2. A bottle-shaped gourd, pumpkin. [M. *chura.*]

பேய்ச்சுரை, a very bitter gourd: *Cucumis Colocynthis*, 116, 315.

சுவர்க்கம் [S. स्वर्गम्] paradise, 243.

சுவை = உருசி, இரசம், flavour ; sweetness, 1. [Comp. S. स्वद्, स्वादस्. Gr. ἡδ-ύ-ς. Lat. *suav-is*, savour. M. *chuva*. T. *chavi*]

With இன், 156 ; with தீம, 244, 321.

Spelt செவ்வி, 322.

[' பால் சுவையிற் குன்றாது, milk loses nothing of its sweetness.' *Mū*]

சுற் ÇURR. [Imitative like *whirl*. Comp. சூழ், சுருள். M., T., C., TU. *suttu.*]

K. 1. சுற்று, *v.* (§ 62) surround, gird, 281.

2. சுற்று, *n.* circuit, limit, 96.

3. சுற்றம், kindred. [T. *chuttamu.*]

சுற்றத்தார் = உறவினர், கேள், கேளிர், கிளைகள், கிளைஞர், தமர், 25.

சுற்றந்தழால், ch. xxi.

சுலை, *v.* (§ 64) = தினவுதின், tingle, itch : சொறி, 313, 335.

[This is properly சுணை. S. शुष्ड. In M. CHUNE|KKA = to be acrid ; CHUNE|KKA = to be irritable. Another reading is தினைத்து.]

சூட் ÇŪḌ.

I. சூடு, *v.* [comp. சூழ், சுற்று. So சூட்டு = மாலை. S. चूड. M.; A. C.] = முடி, அணி (§ 62) wear as a wreath, put on flowers, *etc.*

பூச்சூடி, having put on a garland of flowers, 43.
சூடுமபூ, a flower fit to be worn, 262.

II. சூடு, brand, scar [சுடு, burn], 186.

Some commentators say சூடு = திமில், 'hump: the hump of a white bullock.' But there seems to be no authority for this use of the word; and the glaring ugliness of a branded mark on the exquisitely white sleek skin of a southern bullock is easily understood.

சூத்திரம் = நூல், பனுவல் [S. सूत्र. See *Nannūl*] doctrine, rule, formula, aphorism, 314.

சூல் ÇŪL.

சூல், *v.* [§ 56 (III), சூன்றினேன், சூலுவேன், சூல] scoop out, 44. = தோண்டி, எடு; சூப்பு. [S. चूष. M.]

சூழ் ÇŪṚ. [Comp. சுற்று. M. T. CHŪ|ḌA, inf. = 'to see.']

சூழு, *v.* (§ 57) I. surround, 230 (G. 153), 264, 392.
2. Deliberate, debate, hesitate, 55.

செ ÇE. [T. ERA = red = சே; KEM, *chem*, *chenna*. C. *chen*, *chan*, *chem*, *chey*, *chay*, *say*, *sey*, *kem*. M. *chem*.]

செம், சே, செவ், செய், சேய், சி, சிவ has the idea of
(1) *Red*, *bright yellow*, *golden*; met. *fiery*.
(2) *Right*, *good*. [S. श्री.]

செங்கண், bright, glowing eyes, 373. செந்|தீ, red, hot, glowing fire, 90.
செ|க்கர், ruddy colour, 397.
செந்|செல், 269, 367. So செங்கொள்ளு, red or golden, 387.
செந்|நெறி, 378. செம்|மை, rectitude, 85; excellence, 294.
செம்மா, *v.* (in loco) exult, 331. செம்|புனல், the fresh, pure flood, 222.
செம்|பொறி, red spots, 283.
செங்|கோடு [see கோடு]. Here செம் = 'perpendicular, sheer,' 372.
செவ்|வியர், the good, 322. செவ்|வி for சுவை, 322.
செவ்|வன், directly, 148. (செவ்வையாக.)
செய்|யாள் = நல்லாள், இலக்குமி, the goddess of prosperity; [N. M. K. p. 3]
சே|மா, a bull: எருது, 377.

செது|ம்பு [see சிது|ம்பு, சிதை. S. छिद्र, छेद] = அசும்பு, வழுக்குநிலம், marshy, boggy soil, 128.

[In *Kalit.* 48 : 'இனனுரைச் செதும்பரற்றுசெக்கி,
The season when the foaming mountain torrent raves!' செதும்பு = அருவி.]

செ|கு, *v.* (§ 64) = அழி, kill, 220. [Comp. S. छिद्. செகு. T. *chedu.*]

செங்|கோடு, a precipitous mountain. See செ and கோடு, 372.

செக்கு, *n.* an oil-press, 374. [A Tadbhava of S. चक्र. M., C.]

செத், see சா.

செ|ப்பு, a casket, 126.

[From செம்பு = 'copper' (தாம்பிரம்), itself from செம் = *red,* as இரும்பு from இரும், *black.* M.]

செம்|மா, *v.* (§ 56 [1]) [comp. எ|மா, இற|மா; and செ] exult, 331. செம்மாப்பு = இறுமாப்பு, exultation, 50.

செய் ÇEY.

செய், *v.* [comp. பண். M. In T. CHĒ (CHE|YYU). Comp. Tamil கை with T. *cheyyi* and C. *kai.* S. कृ, कर. See C. D. G. pp. 468, 469] do, perform, 4, 7, 19, 26, 37, 52, 67, 97, 147, 153, 185, 250, 272, 358; make into, 103, 192; acquire, merit, 9, 134; profit, be of use, 393; help, give, 309.

As auxiliary forming verbs from nouns :

சிறைசெய், confine, 222. செயற்பால, what should be done, 147, 153, 185.

செய்(ந்)நன்றி, a benefit conferred, 111. செயலினை = கர்மம், a man's actual deeds, 120.

செய்கை, work = (roofing *etc.*), 127, 147. வேலைப் பரிசென் கட்டடங்கள்.

செய்நி, deed, 246. [Either செய்நிபார், 'those whose deeds are good and consistent;' or செய்து + பார். G. 24.]

செய்குறு, that doeth not, 362. [See உறு.]

செய்தூகம் (= நாம் செய்தும், we will do), 235 [G. 83. Comp. T. *çētumu*].

செய்கலார், they do not, 295.

செய்யாத = செய்யாதனைகளே, 235; செய்வதற்கியலாதனை (G. 95).

செயினும், though men do, 69. செய்யாமை, 246.

K. செயிர் [comp. சீறு, செறு] = குற்றம்; கோபம், wrath, eager worldliness, 50.

செயிர் வேழம், a fierce elephant, 358.

[Nig. செயிர் எனப் பெயர் குற்றப்பேர்.]

செய் = வயல், field, rice-field, 218. [T. CHE|NU. M. Comp. சே|று, கனசெய், புனசெய்]

செருப்பு, leathern sandal, 347. [S. चर्म.]

செல் ÇEL. [Comp. S. चल्, चर्. T. *jaru-gu, chel, sel, chanu.* C. CHEL. M. *chel-ga.*]

1. செல், *v.* (செல்லு, § 70).

Go: போ, 1, 15, 51, 85, 120, 230 (செல்க, may I go! G. 85) 238, 263, 400; pass away, 4, 32; go forth, 24, 179, 259, 268; march by, 3; gain acceptance, 115, 313; reach to, affect, 178; accompany, associate with, 159, 169; approach, 296, 325.

With ஆற, go along, 5.
செல்லாமை = வறுமை; ஈடேறாமை, inability through poverty, 148.
செல்லிடம், when things go well; செல்லாஇடம், when things go ill, 149.
செல்வழி, a path; destined goal: கதி, 8, 154, 230, 238, 328.
செல்சுடர, the setting sun, 394
செலிய (G. 85) 'in order to go,' here = 'as about to go,' 399.
சேறல் for செல்லுதல் [comp. கோறல், கோடல்] = செல் + தல் and எ lengthened as a compensation, 249.
Compounds: எதிர்செல, in the opposite direction, 211.
எதிரசெலவு, a courteous advance to meet any one, 143. [See வழிச்செலவு. T. 2.]
தலைச்செல், advance against, 241.
பினசெல், wait upon, follow, serve, 160, 292, 365.

II. செல்வம். [C. *chel-avu* (*chal*, *chan*) = 'beauty;' and so T., M.]

Wealth = ஐசுவரியம, தனம, பொருள், சம்பத்து, 1, 2, 8, 53, 93, 119, 170, 185, 251, 261, 267, 272, 274.
செல்வர், happy, prosperous, wealthy persons, 8, 115, 170, 270, 277, 296, 368.
செல்வம்பெரிதுடையார், those who own wealth largely, 262, 263.
செல்வநிலையாமை, ch. i. நனறியிலசெல்வம், ch. XXVII.
விழுச்செல்வம், 269. சக்கரச்செல்வம, 346.

செவி ÇEVI = காது [C. KIVI (KIMI). T. CHEVI. M. TU. KEBI. S. श्रव] ear, 59, 257.

செவிகொடு, give ear, 322.
செவி|டு, deafness, 158. [K. KIVA|ḌU; comp. குரு|டு. T. CHEV-UḌU, CHEM|UḌU.]

செவ்வன, see செ.
செவ்வி for சவை, 322.

செழ் ÇEṚ.

செழ், செழு, செழும், செழிய, rich, fertile, luxuriant, 352, 367. [Comp. சிற, சீர், செ. A. M. Comp. also செல்வம்.]

செற் ÇERR. [M. CHER|I. Comp. சேர்.]

I. செறி, *v.* (§ 57) become dense; stick close to, cling to, be attached to, 13, 289, 380.

[செறிந்தவர்கள், intimate fiiends.]

II. செறி|வு, *n.* self-restraint: அடக்கம், 312.

But செறிவு in T 95 = approach; confidence (?). [Comp. *Nīti.* 99]

III. செறி, *v.* (§ 64)=கட்டு, fasten on; cling to; hoard, 304, 312, 358.

[In 312 commentators disagree: (1) பிறரைச்சேர்க்கிற; (2) கோபிக்கும் (செறு); (3) *insist upon.*]

செறிப்பு, fastening; enclosure; shelter, 231.

K. IV. செறு, *v.* (§ 68) afflict, restrain.

செற்றும், though they afflict (வருத்தியும், ஒடுக்கியும்), 222.

செற்றார், enemies, 178.

V. செறு, be wrath with [§§ 64 and 56 (II)]: செறுத்து, 4.

செறின், 134, 164, 304.

['வரைவின்றிச் செறுமபொழுதில், when they are inordinately wrath.' கலித். i. 8.]

[செற்றம்=wrath.] [Comp. செயிர், சினம். Another form of சீறு. M. CHERRU.]

சென்னி, head: தலை, முடி. (p. 1.) [M., T. *chempa.* C. *kenne.* Comp. s कर्ण.]

சே, see செ.

சே ÇĒ=*height.* [Comp. சே|ய். M.=*breadth etc.*]

I. சே|ண், *n.* remoteness, 30.=நெடுந்தூரம், far off, 263.

[Used as an adverb —ண் forms adverbs of place: அவண், இவண், perhaps for கண்.]

II. சே|ய், distance: தூரம். Opp. to அணி.

சேய்த்து, what is distant, 218.

சேக்கை (? சேர்க்கை) [M. CHEGU=' roost.' A. C. KĒ= 'lie']=கூடு, (bird's) nest, 30.

சேடி|யர், maids, slaves, wenches, 354. [S. चेट. M., C., T. *chēḍiya, chēti.*]

சேதனம்=அறிவு, 106. [S. चेतन, चित्.]

சேர் ÇĒR. [சார், செறி. M. T. C. TU. Comp. चि, चर्.]

I. சேர்(ரு), *v.* (§ 57) [comp. the synonymes நள், அடை, சார்] join, attach (oneself) to; (p. 1) 55, 93, 179; acquire, 40; be acquired, fall to the lot of, 82; come to, approach, 122, 124, 139, 150, 175, 176, 252, 385.

நல்வினைஞ்சேர்தல், ch. xviii. சேராத, it does not approach with hostile intent, 241.

சேர்கலா (+கு+அல்+ஆ, G. 91)=சேராத, 121.

[சேரி (p. 35 *note*)=சேர்பு, சேர்வு, 'village, street, home:' hence *chēri* or *cherry* in names of places.]

II. *சேர்*, *v.* (§ 56 III) gather, collect.

In 319 சோக்கும் = சேருமு.

III. *சேர்|ப்பு*, a harbour; shore, bank: *துறை*.

சேர்ப்பன், a chief whose capital was a sea-port: *துறைவன்*. [See 250, and compare *நாடன்* and *வெற்பன்*.]

With தண், 73, 97, 98, 107, 108, 138, 146, 166, 194, 227, 242, 245, 246, 349; except in 117, 168, 336.

IV. *சே|வல்* [*சே*, *செ*, 'red,' or 'male'] a cock, 48. [M., C. Comp. √KĒ, *kēvu*.]

Nig சேவலேகாவலோடு சேறுபுள்ளாண் முப்பேரே.

V. *சே|று*, 1. sweetness, 106. [For *சாறு*=*சாரம்*. Comp. S. अन्तःसार.]

2. Mud; wet soil, 231.

[M. Comp. C. *kesaru*. Syn. in Tamil சேவல், சகதி, சிறுமியம், செதுக்கு, செதும்பு, செயல், செயயல, சேயதகம. See Kittel *in loc.* T. *jīrugu*.]

Nig. சேறெனபகுமபிசாரம திததிப்பு விழவுகளளே.

சேனை=*தானை*, *படை*, an army, 3. [S. शेना.]

சேறல், see *செல்*.

K. சொல் ÇOL=*word*. [M. CHOL. Old C. SOL. Comp. S. स्वन्, स्वर्, सुर.]

Nig. சொல் உரை கிரத்தி செல்லாம்.

I. *சொல்*, *n.* a word: *உரை*, *மொழி*, *வார்த்தை*, *பேச்சு*, *ஓசை*, 13, 63, 100, 115, 119 (may be *கீர்த்தி* or *புகழ்*: comp. *வசை* from वचस्), 253, 334.

கடுஞ்சொல், 73. இனசொல், 73. இனஞ்சொல, 66. சொறபழி, blame, 297.

சொனஞானம், words of wisdom, 311. மிகுதிச்சொல, 346.

[Words to be avoided are (1) பயனில்சொல் (असत्प्रलापं), *useless words*; (2) இனஞ்சொல் (पारुष्यं), *harsh words*; (3) புறங்கூற்று (पैशुन्यं), *slanderous words*; and (4) பொய (अनृतं), *false words*. See K. x, xix, xx.]

II. *சொல்(லு)*, *v.* (§ 70) say, speak, utter: *உரை*, 63, 64, 70, 73, 256, 346.

சொல்|லாமை, 145 (§ 154).

சொல்|லிய=*சொன்ன*, 64, 70, 72.

In 313 there are two readings: சொற்குறறு and சொறகுற்றல், see *தாறு*. சொற்று may = சொலலி, from an old past tense சொற்றேன = சொனனேன.

['. . . . சொலலின
அரில் அகறறுங் கேளவியாா நட்பு . . . .:
Friendship with those whose learning banishes faults in use of words.' T. 1.
'சொலவெனறி, a victory in argument.' T. 17.]

சோதிடம், astrology, 52. [S. ज्योतिषं.]

சோர் ÇŌR [S. शॄ and सृ. Comp. சரி, சொரி. M., C. SOR] *v.* (§ 60) for சொரி, flow down, slip, let slip, omit.

சோரினும், though it trickle in, 383; totter, 13: தள்ளாடு, forget, 311.

சோர்|வு (for சொரிவு) = மறதி, remissness, negligence, 145, 256. = தளர்ச்சி, பொச்சாப்பு.

சோலை = பூங்கா [comp. சாலை; S. शाला. M.] a grove, 17, 234.

சோறு = சாதம், அன்னம், boiled rice, 200, 217, 293.
[= *anything soft*: comp. சேறு, சொறி. M. C. *sōru* = 'tender.']

ஞ ÑA = ந.

ஞாயிறு, *n.* = நாயிறு, the sun, 7. [M. A. C. *nēsaru.*]
[Comp. Bh. I. S. 1204:

'आयुषः खण्डमादाय रविरस्तं गमिष्यति ।

When the sun sets it takes away a portion of life.' See also K. 334.]

ஞாலம் [from ஞால், hang, = நாலம். C. JŌL. M. NĀLU] earth, world, = பூமி, 72, 148, 296.

ஞானம் (ज्ञान), knowledge: அறிவு, 116, 308 (see மெய், அஞ்-, கை, சொல்).

ஞான்று = பொழுது.
எஞ்ஞான்றும் = always, ever, 14, 216, 256, 385.
[Comp. நாள + இ|ன்று + அ|ன்று + எ|ன்று. M. *ñānnu.*]

நெமிர், *v.* (§ 64) compress, bruise, 237. [Comp. நெரி, நெருங்கு.]

த TA.

1. த represents S. त, थ, द, ध.

2. த is used for S. स्, श; as in மனது = मनस्, திரு = श्री.

3. த is the middle particle or sign of past time; H. B. § 15. Changing into த்த, ந்த, ற, ட், and ன.

4. த், து is the termination of neuter singular (ஒன்றன்பால்): அது, செய்வது. Comp. S. तद्. Lat. *illud.* Gr. τό. Goth. *thata.* A. Sax. *thæt.*

5. து (த்து) forms neuter nouns: கை|த்து, உடை|த்து, 19, 126.

து is also a formative: எய்|து; and த்து of causal verbs, நடத்து (§ 160).

6. தி forms nouns: செய்-தி; and is an inflexion of 2nd pers. sing., G. 83, 84. உண்டி = உண் + தி.

தக் TAG. [With idea of *contact, order, fitness.* M., C., T. Compare with தங்கு (*tango*, *ταγ*, स्थग्), தாக்கு, தாங்கு, தகரு, தகை; T. *tagalu.*]

தகு, *v.* (§ 157) fit, be becoming.

தகவு, fitness, 167. தக|வு, worth, 241.

தகுவது, a befitting thing, 223, 226.

தக்க with verbal roots: 'things *blameable, despicable,* worthy of . . .' [G. 153] 47, 92, 102 (for விழும், *Nannūl,* 224), 228, 251 (அவாவ), 302, 316, 361.

தக்கார், the worthy, 38, 80, 112, 220, 250, 259, 327.

தககவால்லார், the unworthy, 112. வியத்தக்கான், he is a wonderful person, 325.

தகு|தி, a fitting, worthy course, 72. தகை = தனமை.

சிறுதகைமை, humility, 170. தகைமை for தகுமை.

அனைத்தகைத்தே, it is of just such a nature, 101, 138, 192, 211, 269.

தகடு = தட்டு, leaf, 266; outer petal := புறவிதழ். [M. *ta-gidu* = 'thin leaf of metal.' Comp. C. *tagahu.* T.]

தக|ர் TAG|AR [S. तक्. Comp. தகு, தாக்கு.]

I. தகர், *v.* (தகரு, § 57) be broken, shattered, 156, 257.

தலைதகர்ந்து, having its point broken, or blunted.

II. *n.* a ram: *the shatterer,* 376, 378. [C. M. T.]

தக்கோலம், *Clerodendrum inerme,* 43. See Gund. Mal. 'aromatic berries.' In T., C., M. S. कक्कोल and तक्कोल, *Pimenta acris.*

Some say தக்கோலம் = அடைகாய், i. e. *betel leaves and areca nut,* so commonly chewed. Another says, பஞ்சவாசத்தி லொன்று, 'one of the five fragrant aromatics:' *illicium anisatum.*

தங் TAṄG. [Root TAG, தக் with inserted nasal, as in Latin *frag* and *frang.* T. *takku,* 'remain.' C. *taṅgu.* M. *taṅṅu, tañju.*]

தங்கு, *v.* (§ 62) abide, be stable, 88, 246, 365.

தட் TAḌ [S. तट्].

I. தடம் [comp. தடு. T., C., M. *taḍa*].

As *adj.* தட, broad, full, swelling, 116, 378.

II. தட்டு, *n.* a flat plate. [Comp. தகடு. C. *taṭṭe.*]

III. தட்டு, *v.* (§ 62) tap, strike, 355. [C., T., M.]

IV. தடு|மாறு, be perplexed. [? From தடம் + மாறு.]

தடுமாறும் = புடைபெயர்கின்ற, that moves rapidly, 191.

தடுமாற்றம், perplexity, confusion, bewilderment, 27, 33, 140. See மயல். [T. *taḍabaṭṭu, tadamāttu.* C. *tada.*]

v. தடி, flesh, = உன், மாமிசம், தசை, சதை, 46.

[The meaning is, '*what is* தடம், *stout; robustness;*' hence 'staff, body;' and 'flesh.' M., C., T.]

தண் TAṆ. [M. C. Hind. *thaṇḍ.* Comp. T. *tani-yu.*]

I. தண் = குளிர்ந்த, cool (சேர்ப்பு) 73, 97, 98, 138, 166, 194, 227, 242, 249, 391.

(கோது) 209, (புறகை) 210, (வயல, சாநது) 389.

தணணீா (நீா), 139. [Some read தண்ணீா for தெண்ணீர் in 150.]

II. தணி, *v.* (§ 57) be relieved, grow cool: ஆறு, 68.

v. (§ 64) cause to abate, *or* diminish, 104, 340, 369.

['இல்லோாபுனகண் ஈகையிற்றணிக்க,

To relieve by gifts the suffering of the destitute.' *Kalit.* 47.]

III. தண்ணம் [an imitative word. C. *daṇa-daṇa*] 'drum with one head,' used at funerals: சாப்பறை, 6. Comp. 24, 25. = தண்ணுமை.

[Jī. Chin. i. 263:

'செநதீகருநதுளைய தீங்குழல்யாழ்
தேநதேம எனனுமணிமுழவமும
தநதாஙகிளையார் மேலவிரல்கடணடத்
தாநதாம எனறிரஙகுந தணணுமைகளும்.

They bring sweet-voiced flutes with black holes burnt with red fire, and lute, and jewelled tambour that sounds Tēm Tēm; and while youths touch these with their fingers, drums wail out Tām Tām.']

தண்டு, I. *n.* = கோல், staff, 14. [S. दण्ड; but comp. தட், தட, தடி, தடு.]

2. *v.* (§ 62) separate: பிரி.

தண்டாச்சிறப்பின, endowed with inalienable excellence, 62; live apart, mope, 324.

தந்தை, father: எந்தை, தகப்பன், பிதா, 197, 237, 253, 367. [T. *taṇḍri.* M. *tanda.* C. *tande.* Comp. C. D. G. p. 293; but also S. तत, तात. See Kittel.]

தம், தமர், see தான். (G. 108.)

தய TAYA.

தய|ங்கு, *v.* (§ 62) shine; wave; hang: தளம்பு. [Comp. இயங்கு, இலங்கு, and S. दय्, दी; and *dangle.*]

தயங்குநீர், clear water, 210.

தயங்க = அசைந்து தோன்ற, appear dangling, 16.

தயிர், curdled milk, 116. [M. S. दधि.]

தருமம் [S. धर्म] charity: அறம், 250.

The use of this word is a mark of later date

தரை [S. धरा] the earth, a land, 200. See முத்தரையர்.

தல் added to verbal stems. G. 94.

தல் TAL, *place*.

தலை [as நிலை from நில், and கலை from கல். M., T., C., TU. *tare*. In some uses it is akin to S. स्थल, तल, दल].

1. Place: இடம். And so as a postposition of 7th case. G. 63.

[Jī. Chin. 1. 232: 'நிலத்தலைத்திருவனாளை, she who is like Lakshmī *upon earth*.']

தலைவரு, 57, 79, 141, 198: சேர், சோ, come upon. தலைச்செல, attack, 241.

தலைக்கூடு, join, come into association with, 162.

தலைப்படு = attain unto, advance, rise, 139, 160, 272, 291.

2. Head, 14, 21, 43, 61, 87, 375.

இடுதலை, வெண்டலை, see இடு, வெள், 49, 50.

3. What is chief; highest, best [S. उत्तमं] 52, 53, 133, 216, 248, 275, 297, 366 (=the first-class men, 'head-men'), 298, 365.

தலைமக்கள, 205. தலைவன = நாயகன, இறைவன, பதி, 3.

தலைக்கண், topmost place, 368.

4. The extreme point, top, 257.

இருதலையும், both extremes, 114. ஒருதலையா, persistently and exclusively, 160.

['ஒருதலையான வாதுறா உமமுப்பும புணாநதாாக
இருதலையும இனனுப் பிரிவும . . .

Old age that *steadily* draws on, and separation of lovers bitter to *both parties*.' T. 18]

K. தவ் TAV, *fail*. [Comp. S. दम्भ.]

I. தவு, fail, perish: தவல், 137. = தவறல். [C.]

II. தவ|று, *n.* [comp. தவு, தவல், தபு, தப்பு, தப்பிதம், தவிர். C. *tavir*. T. *dabbaru*].

தவற்றினல், on account of their faults, 69; failure, 31; குறைவு, deficiency, 191; fault, 302, 364.

III. தவ|ழ், *v.* (§ 57) creep, crawl; traverse, 142: உலவு.

K. தவம் [தபம், தபசு. S. तपस्] penance, 31, 51, 195, 333, 365.

தவசி, an ascetic, 99.

தழ் TAR.

I. தழு|வு, *v.* (§ 62) [C. *tarkey*, *tabbu*. M. *tarugu*] embrace, enfold, 285.

தழால் for தழுவுதல், the support of, ch. xxi.

II. தழ|ங்கு=முழ|ங்கு, *v.* (§ 62) roar [an imitative word, S. तरङ्ग] 339.

III. தழீ இம் an imitative word, for the sound of a drum, 6.

தள் TAḶ, *push*. [Comp. தளம்பு, துள, தள்ளு. M., C., T. *tallaḍa*. S. दल्.]

I. தள|ர்=கட்டவிழ், நெகிழ், சோம்பு, பலவீனப்படு, சோர், become relaxed, enfeebled.

தளரா=தளர்ந்து, tottering, 14. (G. 86.) [*Mū.* 1. தளரா=without fail.]
சொற்றளர்ந்து, hesitating, or mumbling in speech, 13.
[Comp. *Iniyavai*. 8:
'குழவி தளர்நடையைக் காண்டல் இனிதே,
Sweet is the sight of the infant's tottering walk.']

II. தளிர், a tender shoot, 336, 355, 373. [See துளிர். S. दल. M., C., T. *taliru*.]

III. தளை, *n.* bond:=பந்தம், பாசம், கட்டு, கயிறு, 12. [M. *tala*. C. *daḷe*, *taḷe*. Comp. G. 177-179.]

IV. தள்|ளு, *v.* (§ 62) [C., M.].
=மற, தமொழு; not even by a slip, =தவறியும், 157.

தறி, *n.* a wooden post: கட்டுந்தறி, 257. [M., C. Comp. S. तरि.]

தற் for தன், G. 35.

தன், தன்னை, தற், see தான்.

தா TĀ, த TA [see தரு, § 70, and வரு. M. *taru*, *tari*. C. *taru* ='bring.' Comp. S. दा, धा, C. D. G. p. 113. T. in comp. *dā-konnu*].

K. தா, give, produce; bring, 83, 104, 235.

தந்து, having yielded, 185.

['தாளினுற் றந்த விழுநிதி, precious treasure the fruit of industry.' T. 47.]
தநதிட்ட=ஈனற, 224, 311.
As an auxiliary: திரிதரும்=திரியும், 284. போதரும்=போகும், 83.

தா TĀ, த TA; தான் TĀṈ, தன் TAṈ; தாம் TĀM, தம் TAM. [See C. D. G. pp. 290-297. In C., TU., T., M. Comp. S. स, सा, तद्.]

I. Reflexive pronoun='self,' § 108.

தான், 248, 278. தனனே, 192. தன, 203.
தற=தன்னை, 93, 101 [G. 35, 152] 203. தத்தம, each one's, 66.
தனக்கு, 15. தனது, his own, 278. தானே, of its self, spontaneously, 125.

தாம, 3, 8, 229. தமது, 278. தம், 5, 10, 229, 292.
தமமுடையார், those that are masters of themselves.

II. தமர் (§ 184) kindred, 30, 77, 87, 229, 283, 290, 379.
தமராயார்மாட்டு, with one's own people, 207.

III. தன்|மை, nature, 118; *selfhood*, = தத்துவம் (§ 184) 137.

IV. தனி, lonely, 324. [In C. and T. as *v.* 'thrive.']

தா|க்கு, *v.* (§ 62) strike, dash against, 389. [Comp. தகர். S. तक्. M, T. *tāku.* C. *tāku*, *tāṭu*.]

In 57 தாக்கரும் = தாங்கரும் = தாங்குதற்கரிய, hard to bear.

தா|ங்கு, *v.* (§ 62) support, endure, 62, 202. [Comp. தா|ரு. S. धा. C., M. *tan̈nu*.]

தாம், 1. See தான், 378. 2. Redundant in 377.

தாரம் [S. दारा] wife: மனைவி, 81, 82.

தா|ய் = ஆய், அன்னை [S. धा, धातृ. C., T. *talli*. See C. D. G. p. 293; but ?] mother; nurse, 15, 20, 101, 201.

தாயம். [S. दाय, an inheritance.]
தாயத்தவர், 278 = தாயாதிகள், the heirs.

தார் TĀR from தர்.

I. தார் = மாலை, garland, 392. [M. = 'a flower.' S. तार.]
தாரினன், one who wears a garland, 390.

II. தார், *v.* (§ 64) = பொறு [comp. தாள். S. भृ, धार] bear, endure, 72.

தாழ் TĀṚ. [Comp. ஆழ், கீழ். M. C.]

I. தாழ், *v.* (§ 57) flow down, 231, 290.
தாழா = தாழ்ந்து, கூனி, being bowed down, 14 [G. 86]; bend, overshadow, 167.

II. தாழ், *v.* (§ 64) delay, 235.
தாழாது, without delay, 342 [G. 90].

III. தாழ்|வு, failure of energy, 191.

K. தாள் TĀḶ, *endure*. [Comp. தாழ். M. C. T. *tāl-chu*, *tāḷu*. Eng. *thole*. S. तुल्.]

தாள், *n.* 1. Endurance, energy: முயற்சி, ஆள்வினை [T. 47].

தாளாளர் = ஊக்கமுயற்சியுடையார், 191. தாளாண்மை = முயற்சியுடைமை, ch. XX, 200.

In K. ஊக்கம். (S. उत्थान, उत्साय.)

2. A trunk, stem, 261.

3. A foot, support, 198.

[T. 31: 'வல்லிதிற் றுனின ஒருபொருள் ஆக்கல்,
The invention of something by ability and energy.'

T. 12: 'தாளாளன என்பான கடனபடா வாழ்பவன,
He is the man of effort who lives without incurring debt.']

தாற் TĀṞṞ.

தாற்று, *v.* (§ 62) fan, sift. [Comp. தால் and தூற்று.]
n. a sifting: merely bandying words, 313.

[This is also read and explained as சொற்று ஆற்றல கொணடு, 'relying on the power of mere words.']

தானை = ஆடை, வஸ்திரம், சீலை, a cloth, robe, 131.

[Nig. தானையே சேனை யாடை படைக்கலம தானும் ஆகும.

In S. स्थाने = in place, suitable.

In sense of 'army' it is merely a form of சேனை; comp. தானபதி. तान = thread, तान्तुव woven cloth.]

தான், self, 248. See தா.

திகழ் TIGAẒ.

திகழ், *v.* (§ 57) shine, glitter: விளங்கு, 389. [M. S. दह्.]

திங்கள் = சந்திரன், moon (நிலா, நிலவு = moonlight) 148, 151, 241. [C.]

திசை = திக்கு [S. दिशा] quarter, direction, 243, 392.

திண் [திட்] TIṆ. [Comp. திட. S. दृंह्, दृढ. திட்பம், திண்மை. C., M. T. *tiṭṭamu.*]

திண், *adj.* firm, stedfast.

திண்ணறிவாளர் = முதறிவுடையார், 27, 227, 305.

திமிர், *v.* (§ 57) rub; rub off, 397. [C. *timir, tiguru.* M.]

திர் TIR, *turn.* [Comp. S. तॄ, तिरस्; GR. τρεπ-; Old Lat. *trep-.* C. *tiri, tiru.* M., T. திரும்பு; திருத்து; திரள், திரை.]

I. திரி, *v.* (§ 57) = வேறுபடு, change, 204, 244.

திரிதந்து = திரிந்து, 284, 351 [தரு]; wander about, 230.

II. திரை = 1. அலை, wave, 194, 224, 391.

திரையகடல், the billowy sea, 263.

2. By meton. 'sea,' 339. [s. तर. தரங்கம். T. *tera*. C. *tere*.]

[In Jī. Chin. iv. 7: 'திரைநீராடை இருநிலமடந்தை,
The goddess of the vast earth to whom the billowy sea is a garment.'

And, 'அலைநீராடை மலைமுலையாகத்
தாரப்பேரியாற்று மாரிக்கூந்தல்
கண்ணகன பரப்பின மண்ணகமடந்தை:

The goddess of this vast expanding earth, whose garment is the billowy sea, the mountains her bosom, the mighty rivers the garlands around her form, and the clouds her locks.']

III. திர|ள், *n*. ball, globe; cluster. [M.]

v. [§ 56 (III)].

திரட்டு, *v*. (§§ 62, 160) make round, 103.

திரள்கால் = திரண்டகாம்பு, rounded stem, 199.

திரு [s. श्री] 'Lakshmī,' goddess of good fortune, 304; 'wealth,' 167, 291.

திருவததவர், 'blessed ones,' as though from a noun திருவம், 57.

திள் TIḶ.

திளை, *v*. (§ 64) gather thick around, boil up, rise up to, embrace. = தவழு; நெருங்கு. [M. *tiḷa*, *tiḷā*.]

மழைதிளைக்குமாடம, a mansion around whose top the clouds cluster, 361.

திற் TIṞṞ, *open*.

I. திற, *v*. (§ 66) [T. *tera*. C. *terra*, 'an opening'].

With வாய், 'open,' 8, 63, 126.

II. திறம் = sort: தன்மை [comp. தரம், திரம், திறல், திராணி. s. स्थिर. M., C. *terra*] good qualities: திறன், 291; goodness, 158; knowing what befits.

எததிறததாள, what kind of a woman? 46.

தினை, millet, *Panicum Italicum*, L., 105.

[தினை பனை எனபன சிறுமைபெருமைகட்குக்காட்டிய அளவை] 323, 344. [M. Comp. S. तृण.]

தின் TIṈ, *gnaw*. [M., C., T. S. तृन.]

தின், *v*. [§ 56 (III)] eat: அருந்து, நுகர், 43, 112, 123, 138, 193, 197, 211, 289; itch, 335.

தீ TĪ. [M. TĪ, 'fire, evil.' Comp. தித்தி, தேம். C. TĪ, TĪ|YU. S.

दी 'shine;' दिन्, दीप् 'fire, burn;' धी 'wisdom.' T. TĪ-PI, 'sweetness.' TU. TŪ. In C. CĪ = 'sweet,' and 'be scorched.']

I. தீ, *n.* fire: நெருப்பு, அக்கினி. S. वह्नि [comp. தேசு] 24, 180, 224, 225, 234, 291, 298, 310; a spark, 389 = தீப்பொறி.

செந|தீக்கு, glowing fire, 90. தீ|மடு, kindle a fire, 331.

II. தீ, தீய, *adj.* evil, 351.

தீவினை = பாவம், sin. தீவினையச்சம், ch. XIII. Cruel, 5. தீவளி, temper, 19.

தீது, (what is) evil, 51, 73, 152, 228, 244, 284, 357 [G. 93].

தீய, (*pl.*) evil, evil things, 36, 109, 158, 195, 223 (*adj.*).

தீயார், evil persons, 172. தீமை = இன்னா, evil, 186, 227. தீங்கு, 66, 240. = தீமை

தீப்புலவன் = டம்பக்காரனானபுலவன், an heretical teacher, 312. [Opp. to நற்புலவன்.]

III. தீ, தீம், *adj.* sweet: மதுரமான, இனிய, 199, 244.

தீண்டு, *v.* (§ 62) [comp. தீற்று, தொடு, தைத்து, தீட்டு, தீட்டு. M. TIṆḌ. C. *tīḍ*, TĪṬE. T. *tīṭṭa*. S. दिह्] touch, 109.

தீர்த்தம் = புண்ணியநீர், பரிசுத்தமானசலம், a sacred stream, 175. [S. तीर्थ.]

தீர் TĪR.

K. தீர், *v. tr.* and *int.* (§§ 57, 64) = நீ|க்கு, நீ|ங்கு [C., M., T., TU. S. तॄ] remove; get rid of; cure, 50, 161, 205.

தீர [G. 153] = termination 'less,' 2, 347.

So தீரா as a termination = 'full, never free from,' 11.

வரைதீர், faultless observances, 152. தீர, absolutely, 204.

[தீரந்த = நீக்கின. Comp. S. तीर.

'வஞ்சத்திற தீரந்த பொருள், a thing *free from* deceit.' T. 43.]

தீர|ப்பேம் (G. 83) 27. தீரவதற்கு, although want would be thus removed, 306.

தீர|வு, 129 = (நட்பு) நீஙகுதல. தீர்விடத்து = தீரந்தபொழுது, 51 [G. 153].

தீற்று TĪṮṮU, *v.* (§ 62) [M., C. TĪḌ; see தீண்டு].

I. Rub, polish: தேய்.

II. Feed with the hand: ஊட்டு, 350. [M. Comp. தின், தீனி.]

['காயத்தநெறகவளந தீற்றின், if you feed with mouthfuls of ripened *Nel.*' Jī. Chin. XIII. 309.]

K. து TU, துய் TU|Y, *enjoy;* [old C. *tuttu* = 'a mouthful.' Comp. K. 12. துறு, துத்து, துற்று.]

I. து, *v.* (§ 64) eat, enjoy: நுகர்.

து|ப்பு, power, 241.

துப்புரவு, enjoyment; means of enjoyment: நுகர்ச்சி, 87, 289. [See ஒப்புரவு *etc.*]

துவை, spiced food, 217.

துத்து, food, 190.

[Jī. Chin. xiii. 329: 'துத்தவிழ் ஈதல் செம்பொற்றுறக்கத்துக்கேணி ஆகும்: Giving a grain of rice (அவிழ்) from (your) food (துத்து) is the ladder to the bright golden paradise.']

II. துய், *v.* (§ 64) = து, 83, 93, 167, 202, 268, 273, 274.

III. துத்து, *v.* (§ 62) 190.

IV. துவ்வு, *v.* (§ 62) = து, 250, 276, 366.

[There is a conflict. In 190 the oldest copies have துற்று throughout.]

துகள் = குற்றம் [comp. தூள், so from தொகல், தோல். S. धूलि. M. *tugal*, 'skin of fruit;' see தோல். C. *tokku*, *togaḍu*. S. त्वक्] 2.

துகில் = சீலை [M. Comp. தொங்கு. S. दुकूलं] rich attire, 264.

துக்கம் [S. दुख, दुस्, दुर्. Comp. துன்பம், துயர்] 'sorrow:' used for 'sin, worldly pleasures; all that brings sorrow of heart:' संसार, 121, 123, 190.

துச்சாரி, a licentious profligate, 84. [S दुराचारि, *an evil-liver.* Though sometimes confounded with துச்சன = S. तुच्छ, *a worthless fellow.*]

துஞ்சு TUÑÇU, *v.* (§ 62) die, 21, 191. [Comp. தூ* in தூங்கு. M. T. The idea is 'nodding, falling.']

துடி, a drum, 388. [From verb துடி, throb M , T., C. *tudumu.*]

துடை, *v.* (§ 64) wipe off, do away with: துன்பம், 93. [M., C. TOḌAI, TOḶEI. T. TUḌU, TOḌU.]

See *Ēl.* 4, துன்பந்துடைத்தல்.

துணி TUṆI, *v.* (§ 57) resolve upon, 303. [M., C., T. *tuni.* Comp. துண்டி. S. तुड्, तुरड्. The meaning is (1) *cut;* (2) *decide;* (3) *venture, dare.*]

['அரியதுணிந்து வாழ்வார், they have set themselves a difficult task.' T. 73.]

துணிவு, decision, determination, 55.

துணிவொன்றி, coming to the same conclusion.

துணை = a match, companion, *etc.* [M., C. TOṆE. S. द्वा, द्वन्द्व. Comp. தணை.]

1. உதவி, assistance, 78, 136, 381 *help-meet;* partner, 392.
2. அளவு, measure, 37, 38, 94, 105, 140, 187, 218. 196, 231 = until. Comp. வரை, வகை, and தனை.
எத்துணையும், at all; in any degree, 109, 272.
தினைத்துணையும், even so much as a grain of millet, 323.
தினைத்துணையார், } those who as to greatness were as . . ., 105. [See under தினை.]
பனைத்துணையார், }
[In T. 51: 'தார்க்கொழுகிக் கன்னுந் துணைக வெணகலே,
Even when a man is in straitened circumstances relations are helps; or (perhaps better), *a friend in need is a friend indeed.*']
துணை|மை = சாதகம், ability, 127.

துப்பு, see து.
துய், see து.
துயர் = துயரம் [comp. துன்பம். M.; from S. दुर्] sorrow.
= துன்பம், 35, 114. துயர்களையாள, he does not relieve their sufferings, 9.
'ஆழ்துயர் உழப்ப, they will suffer the deepest sorrow.' Jī. Chin. xiii. 165.
துரும்பு = சக்கை, refuse stalks, 35.
[Comp. S. तृण. M. Like இரும்பு, அரும்பு, கரும்பு.]
துவ், see து.

துழ TUḺA = குழை, கல.

துழவு, துழாவு, *v.* (§ 62) mix, mingle up.
துழாய் = துளவி, 311. [பரப்பி.]
[In M. TUḺA, 'a paddle.' Comp. துளம்பு.]

துள் TUḶ.

